## 2019 ஏப்ரல் மாத ஊழியங்கள்
## Service / Ministry in the Month of April 2019

| | | |
|---|---|---|
| 30th Mar – 5th Apr 4:00PM -8:00PM | விடுமுறை வேதாகம வகுப்புகள் | மஜ்லிஸ் ஹால் |
| 01st Apr 11:00AM-1:00PM | உபவாச ஜெபக்கூடுகை | ஆயர் இல்லம் |
| 05th Apr 7:00PM - 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை; VBS நிகழ்ச்சிகள் | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 12th Apr 7:00PM - 9:00PM | 11வது சபை நாள் / குருத்தோலை ஞாயிறு | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 18th Apr 7:00PM - 9:00PM | வியாகுல வியாழன் சிறப்பு ஆராதனை | மஜ்லிஸ் ஹால் |
| 19th Apr 7:00PM - 9:00PM | புனித வெள்ளி மும்மணி தியான ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 21st Apr 7:30PM-8:30PM | உயிர்த்தெழுதல் ஆராதனை ஈஸ்ட்டர் பண்டிகை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 26th Apr 7:00PM - 9:00PM | மாலை ஆராதனை வருடாந்திரா பொதுக்குழு கூட்டம் | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 27th Mar 7:30PM - 8:30PM | பெண்கள் ஐக்கிய சங்கம் மாதாந்திர ஜெபகூடுகை | ஆயர் இல்லம் |
| 31st Mar 11:30PM to 12:30AM | மாத இறுதி மற்றும் புதிய மாத துவக்க ஆராதனை | ஆயர் இல்லம் |

## உள்ளே


ஆயர் மடல்

திருமறை தியானப்பகுதி

ஆயரம்மா மடல்

செயலரிடமிருந்து

வேதாகம களஞ்சியம்

கட்டுரைகள்

சிறுவர் பகுதி

வேத வினா விடை போட்டி

பிறந்த நாள் திருமண நாள் ஆசரிப்போர்

தெரிந்து கொள்வோம்

தினசரி வேதவாசிப்பு


## CSI தமிழ் திருச்சபை- அல்-அய்ன் ஊழியங்கள் (பொது)

### மெயின் ஒர்ஷிப் ஹால் - ஓயாசிஸ் ஆஸ்பித்திரி வளாகம், அல்-அய்ன்
### Main Worship Hall – Oasis Hospital Campus, Al-Ain, UAE

| | | |
|---|---|---|
| 1st & 3rd Fridays / வெள்ளி | 7:00 PM | Communion Service / திருவிருந்து ஆராதனை |
| 1st & 3rd Fridays / வெள்ளி | 6:30 PM | Men's Prayer / ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 7:00 PM | Evening Regular Service / மாலை ஆராதனை |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 6:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Every Friday / எல்லா வெள்ளி | 6:15 PM | Children's Bible School / சிறுவர் வேதாகம வகுப்புகள் |

### ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள்
### Ministries at Parsonage

| | | |
|---|---|---|
| 1st Friday / வெள்ளி | 11:00AM | Fasting Prayer / உபவாச ஜெபம் |
| 2nd & 4th Sat / சனிக்கிழமை | 7:00 PM | Gospel Ministry / சுவிசேஷ ஊழியம் |
| 3rd Sat / சனிக்கிழமை | 7:30 PM | Women's Prayer / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| All Wed /எல்லா புதன்கிழமை | 7:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Last Day of Every Month மாதத்தின் கடைசி நாள் | 11:30PM | Month End & Beginning Prayer மாத இறுதி மற்றும் புதிய மாத துவக்க ஆராதனை |

# ஆயர் மடல்...

*அன்புக்குரியவர்களே!*

***Good Friday and Easter Greetings...!***

*இந்த இரண்டையும் பிரித்துப் பார்க்க முடியாது!*

*இயேசுவின் சிலுவை இல்லையென்றால் இயேசுவின் உயிர்த்தெழுதலும் இல்லை. உயிர்த்தெழுகின்ற ஒரு அனுபவத்திற்கு இந்த உலகில் ஈடு இணையே இல்லை. அந்த அனுபவத்தை பெற்ற ஒரே தெய்வ மனிதன் இயேசு கிறிஸ்து ஒரே மனித தெய்வம் இயேசு கிறிஸ்து. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணியை செய்து முடித்தவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.*

*ஆதலால் இந்த லெந்து காலத்திலே கிறிஸ்துவின் சிலுவையை..! கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை..! தனிப்பட்ட முறையில் நம்மோடு அடையாளப்படுத்தித்தியானிக்க முயற்சி செய்யுங்கள். ஒரு புதிய ஆவிக்குரிய வல்லமையால் நிரப்பப்படுவீர்கள். இந்த லெந்து காலத்தை மிகச்சிறந்த முறையில் அனுசரித்து ஆவிக்குரிய வாழ்வில் உருமாற்றம் பெற முயற்சி செய்யுங்கள். உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் சீர்திருத்தம் செய்ய இந்த லெந்து காலத்தை பயனுள்ளதாக்கிக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகள் இந்த லெந்து காலத்தை பயனுள்ளதாக அனுசரிக்க முன்மாதிரியாக குடும்ப எல்லைகளை நியமித்து ,அந்த குடும்ப எல்லைகளுக்குள் வாழ கற்றுக் கொடுங்கள். பிற்காலத்தில் உங்கள் சந்ததிகளுக்கு அவர்கள் எடுத்துச்செல்வார்கள்.*

*ஆதலால் இந்த லெந்து காலத்திலே உங்கள் தனிப்பட்ட, குடும்ப ஜெபநேரங்களை, பிறருக்கு உதவும் நேரங்களை கூட்டுங்கள். எல்லாவிதமான திருச்சபை கூட்டங்களில் குடும்பத்தோடு உற்சாகமாக பங்குபெறுங்கள்.*

***கர்த்தரின் சிலுப்பாடுகளை அதிகமாக தியானித்து மனந்திரும்புங்கள் கர்த்தரை நோக்கி!***

*இப்படிக்கு,*
***உங்கள் ஆயர்,***
***Rev. M. Christopher Rajendran.***

# திருமறை தியானப்பகுதி...

***"இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக்கொண்டு கொலைசெய்தீர்கள். தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்;அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது."(அப்போஸ்தலர் 2:23,24).***

***Painful Good Friday! Happy and glorious Easter!***

*பெந்தகொஸ்தே நாளில் பேதுரு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டு (Anointed with very fresh anointing of the Holy Spirit). தனது முதல் பிரசங்கத்திலே, பலமொழிகளைச்சார்ந்தவர்களும் சரியாக புரிந்து கொள்ளும்படிப் பிரசங்கித்தார்! இந்த உலகத்தில் யாரும் இவ்விதமாக இதுவரை பிரசங்கிக்கவில்லை. 3000 பேர் உடனே மனந்திரும்பி, ஞானஸ்நானம் எடுத்து இந்த உலகத்தில் முதல் திருச்சபையாக மலர்ந்தார்கள்...!*

*இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரசங்கத்தில்தான் இயேசு கிறிஸ்துவை யூதர்கள் பிடித்து எவ்வாறு கொலைசெய்தார்கள் என்பதை இந்த வசனங்களில் பிரசங்கிக்கிறார்.இதற்கு முந்திய வசனத்தில் 22ல் இயேசுவை தேவன் மாபெரும் அடையாளங்களாலும், அற்புதங்களாலும் வெளிப்படுத்தியிருந்தும், அவரை, நசரேயனாகிய இயேசுவை,தேவனால் அந்த இயேசுவை என்று, மிகவும் உறுதியோடு மிகுந்த தைரியத்தோடு, மிகத்தெளிவாக, அந்த இயேசு (This Jesus) என்று ! அவர்கள் தாங்கள் யாரை துன்மார்க்கமாய் சிறைபிடித்துச் சிலுவையில் அறைய, அக்கிரமக்காரர்கள் கையில் ஒப்புக்கொடுத்து, அநியாயமாக கொலைசெய்தார்களோ அந்த இயேசுவைப்பற்றித்தான் முதல் பிரசங்கம் பேதுரு அப்போஸ்தலர் 3000 பேர் நருங்குண்ட, நொறுங்குண்ட இருதயத்தோடு மனந்திரும்பும் விதமாக வல்லமையாக பிரசங்கிக்கப்பட்டது.*

*ஒரு நற்செய்தியைப் பற்றி பிரசங்கம் செய்யும் பொழுது சிலுவையில் அறையப்பட்ட (Crucified Jesus of Nazareth) இயேசுவைப்பற்றித்தான் பிரசங்கம் செய்யவேண்டும். சிலுவையில் அறையப்பட்ட இயேசுதான், பின்னர் அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்து, மெசியா, தேவகுமாரன், மனுஷகுமாரன், கர்த்தர், இரட்சகர் என்று புரிந்துகொள்ளப்படுகிறார். தாங்கள் பல காலமாக ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த கிறிஸ்துவா? மெசியாவா? இந்த நாசரேத்து*

இயேசு! என்று ஆச்சிரியத்தோடும், பயபக்தியோடும், விசுவாசத்தோடும் பிரசங்கத்தைக்கேட்ட பலர் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள்,முதல் திருச்சபை மக்களாக, முதல் கிறிஸ்தவர்கள் என்ற சிலாக்கியத்தையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.

*The Supreme Manifestation of God's love to Humanity is the Crucifixion of Jesus:* கூர் ஆணிகளால் துளைக்கப்பட்ட இயேசுவின் சரீரம், நமது மனுக்குலத்தின் மேல் தேவன் எவ்வளவு உயரமாக, ஆழமாக தனது தெய்வீக அன்பை வெளிப்படுத்தினார் என்பதை மிகத்தெளிவாக காண்பிக்கிறது. ஆதலால் தான் நமது மனித புத்திக்கு எட்டாத அந்த தெய்வீக அகாப்பே அன்பின் ஆழத்தைப் புரிந்து கொள்ள பவுலைப்போன்று முயற்சி செய்யவேண்டும். கல்வாரிச்சிலுவையிலே வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலத்தையும், ஆழத்தையும், நீளத்தையும், உயரத்தையும், இன்னதென்று உணர முயற்சி செய்யும் காலம்தான் இந்த லெந்து காலம். (எபேசியர் 3:18). இயேசுவின் சிலுவை பாவத்தின் மீதும், சாத்தானின் மீதும், உலகத்தின் மீதும் வெற்றியைக்கொடுத்தது என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை ,தேவன் நம்மீது வைத்திருக்கிற உண்மையான அந்த இயேசுகிறிஸ்துவின் அன்பு.

தேவன் நம்மேல் வைத்துள்ள அன்பை நாம் எந்த அளவுக்கு அறிந்திருக்கிறோம்? புரிந்திருக்கிறோம்? நாம் சரியாக புரிந்திருந்தால்தான், நாமும் இயேசுவைப் பின்பற்றி சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்க முன்வருவோம். வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையானாலும்,உண்மையினாலும் அன்புகூருவோம். இயேசுவின் சிலுவை *(The Crucifixion of Jesus)* நமக்கு சொல்லும் நற்செய்தி என்னவென்றால் தேவன் முந்தி நம்மிடத்தில் கூர்ந்திருக்கிறார் என்பதாகும், ஆதலால் நாமும் அவரிடத்தில் அன்புகூரவேண்டும். *(The Crucifixion of Jesus clearly displays God's Supreme Love towards us as well as enforces us to respond to that Divine love with our love).*

நாம் திரியேக தேவனிடம் எந்த அளவுக்கு அன்பு கூர்ந்துகொண்டிருக்கிறோம்? என்பதை எந்த அளவுகோலில் அளக்கலாம் என்றால், பிறரிடத்தில் நாம் எந்த அளவுக்கு அன்பு கூர்ந்துகொண்டிருக்கிறோம் என்பதின் மூலமே! ஆதலால் சிலுவையில் அறையப்பட்ட இயேசு நாம் அன்பில் பூரணபடவேண்டும் என்று நம்மை நெருக்கிஏவுகிறார். கிறிஸ்துவின் சிலுவை அன்பு நம்மை நெருக்கிஏவாவிட்டால்! நாம் இன்னமும் இயேசுவுடன் நெருங்கிய

*ஐக்கியம் வைக்காமல் தொடர்ந்து சமயம் சார்ந்த, உலகப்பிரகாரமான, பெயர் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். ஆதலால் இந்த லெந்து காலத்திலே இந்த சிலுவையில் அறையப்பட்ட இயேசு நம்மோடு பேச இடம்கொடுப்போம்.*

*The Supreme Manifestation of God's power to Humanity is the Resurrection of Jesus: இயேசுவின் சிலுவை இல்லையென்றால், அவரது உயிர்த்தெழுதலும் இல்லை! அக்கிரமக்காரர்கள் இயேசுவை சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தார்கள். ஆனால் சர்வவல்லமையுள்ள தேவன் அவருடைய மரணஉபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார், அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது. மரணம் என்பது பாவம் என்ற அடிமைத்தனத்தினால் வந்தது, ஆதலால் தான் அதை அடிமைத்தனத்தின் கட்டு எனப்படுகிறது. இந்த அடிமைத்தனத்தின் கட்டை யாராலும் அவிழ்க்க முடியாது! எந்த ஒரு பெரிய உச்சத்தின் அதிகாரத்தில் இருந்தாலும்! அவர்களால் தங்களது மரணகட்டுக்களையே அவிழ்க்க முடியாது. அதை தனது தெய்வீக வல்லமையால் அவிழ்த்து, இயேசுவை உயிர்த்தெழச்செய்தவர் பிதாவாகிய தேவன்.*

*இந்த உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிகிறதற்கும், உயிர்த்தெழ தகுதியாகும்படிக்கும்! இயேசுவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன், குப்பையுமாக எண்ணுகிறேன் என்று சொல்வது போல நாமும் எண்ணிப்பார்க்க இந்த லெந்து காலத்திலே கற்றுக் கொள்ள வேண்டும். நாம் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் ஞானஸ்நானத்தினாலே! இயேசுவோடு கூட நம்முடைய மாம்சத்தையும், அதான் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறோம், என்று எண்ணி, பாவ வாழ்க்கையை அடக்கம் செய்துவிட்டோம் என்று எண்ணி வாழும் கிறிஸ்தவ வாழ்க்கையில் தான்! உயிர்த்தெழுந்த வல்லமையால் நிரப்பப்படுவீர்கள், கிறிஸ்துவுடன்கூட உயிர்த்தெழுந்த ஒரு புதிய ஆவிக்குரிய அனுபவத்தை பெற்றுக்கொள்ளமுடியும்.*

*மேலானவைகளையே நாட முடியும். பரிசுத்த ஆவியினாலே சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து, ஆத்துமாவை சுத்திகரித்து, சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறமுடியும். அப்படிப்பட்ட ஒரு புதிய ஆவிக்குரிய அனுபவத்தை பெற்றுக்கொள்ள இந்த லெந்து காலத்திலே முயற்சி செய்வீர்களாக!*

*அன்புடன்...* ***உங்கள் ஆயர்,***
***Rev. M .Christopher Rajendran***

*அன்புக்குரிய தாய்மார்களே..!*


*இந்த மாதத்தில் நாம் இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும், அவரது உயிர்த்தெழுதலைப்பற்றி அதிகமாக தியானித்தும், பிறரிடத்தில் இந்த சத்தியத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும். அவ்விதமாக நாம் பேச ஆரம்பித்து, வேதவசனங்களைத்தியானித்து, தியானித்து மறுரூபமாகுங்கள். உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து யாருக்கு முதலாவது காட்சியளித்தார் தெரியுமா ?*

*ஒரு பாவப்பட்ட, பாவம் மன்னிக்கப்பட்ட , மகதலேனா மரியாளுக்கு! என்பதை நாம் ஒருபோதும் மறவாதபடி, மகதலேனா மரியாளைப்போல தூய்மையான ஒரு அன்பை உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் மீது பொழிந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோமாக!*

*உயிர்த்தெழுந்த திருநாள் வாழ்த்துகள் !*

*இப்படிக்கு... உங்கள் ஆயரம்மா*
***Angel .C***

***வேதாகம தேர்வு'2019***




***10th May'19***

**வேதாகம பகுதி**

***2 இராஜாக்கள் / 2nd Kings***
***எபிரேயர் / Hebrews***
***யாக்கோபு / James***

***Please register before 3May 2019***

# செயலரிடமிருந்து...

பிரியமானவர்களே...


தம்மைத்தாமே வெறுமையாக்கி தம்மைத்தாமே தாழ்த்தினதினால் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை தரித்துக் கொண்ட இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள்..! கிருபையாய் நம்மை மீண்டும் ஒரு மாதத்தை காணச்செய்தவரும் நான் உனக்கு முன்னே போய் கோணலானவை செவ்வையக்குவேன் என்று நமக்கு முன் கடந்து சென்று பாதைகளை செவ்வைப்படுத்துகிறவரும்; இனி வரும் அத்தனை நாட்களிலும் அனைத்து காரியங்களிலும் நம்மை வெற்றிச்சிறக்க பண்ணுகிற வரும் பர்வதங்களையும் மெழுகு போல் உருகப்பண்ணி தடைகளை அகற்றுபவராக முன்செல்லும் சேனைகளின் கர்த்தரின் நாமத்தில் உங்களுக்கு என் ஈஸ்டர் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்

சென்ற மார்ச் மாதத்தில் தேவன் நமக்கு செய்தவைகளை நன்றியுடன் நினைவு கூறுவோம். ஆலய ஆராதனைகள், பெண்கள் ஐக்கிய சங்க சிறப்பு கூடுகை, விடுமுறை வேதாகம வகுப்புகள் ஆகியவை சிறப்பாக நடத்த தேவன் நமக்கு கிருபை கூர்ந்தார். *UVBS Director Mr. George Stephenson* மற்றும் அவரது குடும்பதினருக்கு அன்பின் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறிக்கொள்கிறேன். ஒன்றிணைந்து ஜெபத்தாலும் தங்களுடைய விலைமதிக்கமுடியாத நேரத்தை கொடுத்ததும் செயல்பட்ட அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துகளும் நன்றியும் உரித்தாக்குகிறேன்.

வரும் நாட்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆராதனைகளுக்காக, திருச்சபையின் ஊழியங்களுக்காக அனைவரும் ஒருமனப்பட்டு ஜெபிப்போம். உங்கள் ஊக்கமான ஜெபமும், ஆதரவும், ஈடுபாடும் நம் திருச்சபை ஊழியத்தில் அதிகரிக்க, அதிகமாய் ஜெபித்திட வேண்டுகிறேன். அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன்.

இப்படிக்கு ...
அன்புடன் கிறிஸ்துவின் பணியில்
***S. சுரேஷ் ராஜன்***

| நமது மிஷினரி ஊழியத்தேவை | | |
|---|---|---|
| **மிஷனரி பெயர்** | திரு. சூரிபால் சதா | திரு. கிறிஸ்டோபர் |
| **பணித்தளம்** | நீலமங்கலம் , கள்ளக்குறிச்சி-மாத்தூர் | மேல்முத்தானூர்-குருகிலாமூர் |
| **ஸ்பான்ஸர் தொகை** | ***AED 450/- Month*** | ***AED 450/- Month*** |
| **கர்த்தர் உங்களோடு பேசுவாரனால்...நீங்களும் இந்த மிஷனரி ஊழியத்தை தாங்க முன்வாருங்கள். ஒரு குடும்பமாகவோ அல்லது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மிஷனரிகளை தாங்க முன்வர உங்களை அன்போடு அழைக்கிறேம்** | | |



வேதாகம களஞ்சியம்

## தெரியுமா உங்களுக்கு....

*வேதத்திலே சொல்லப்பட்டுள்ள மலைகளில் மிக உயரமான மலை அரராத் மலை இதன் உயரம் .5260.8 மீட்டர் ஆகும்.*

*ஏதேனிலிருந்து வரும் நதியாக சொல்லப்பட்ட "ஐபிராத்து" )தற்போதைய பெயர் யூப்பிரடிஸ் என்னும் நதியின் மொத்த ( நீளம்2880 கி.மீ.*

*ஏதேனிலிருந்து வரும் நதியாக சொல்லப்பட்ட என்னும் நதியின் நீளம் "இதெக்கேல்"1844.2 கி.மீ.*

*மோசே குழந்தையாக விடப்பட்ட நைல் நதியின் மொத்த நீளம் 3218.6 கி இதன் சராசரி அகலம் .மீ ஆகும்.1.5 கி.மீ.*

*யோர்தான் நதியினுடைய மொத்த நீளம் 321.86 கி.மீ ஆகும்.*

*யோர்தான் நதி 3 முறை இரண்டாக பிரிந்தது*
*1. யோசு 4:7, 19*
*2. 2 இரா 2:8.*
*3. 2 இரா 2:13, 14*

---

## *Missionary Biography*

## ஏமி கார்மைக்கேல் அம்மையாரின் வரலாறு

***அன்பில்லாமல் கொடுக்கலாம். ஆனால் கொடுக்காமல் அன்பாயிருக்க முடியாது.*-ஏமி**

*தனது வாழ்வை இந்தியாவை நேசித்து கொடுத்த உத்தம தாயின் வரலாறு...*

*பிறப்பு : 16 டிசம்பர் 1867 / இறப்பு : 18 சனவரி 1951*
*மிஷினரி தளம்: இந்தியா, இலங்கை*

**இளம்பருவம்:**
*ஏமி கார்மைக்கேல் 1867 ஆம் ஆண்டு கவுண்டி டவுன் என்ற இடத்திற்கு அருகில் உள்ள மில்லிஸ்லே எனும் கிராமத்தில் பிறந்தார். இவரின் தகப்பனார் பெயர் டேவிட், தாயின் பெயர் கேத்ரின் என்பதாகும். இந்த தம்பதியருக்கு 7 பிள்ளைகள் இருந்தனர். ஏமி கார்மைக்கேல் எல்லாருக்கும் மூத்த மகளாகப் பிறந்தார். தனது தந்தையின் மரணத்திற்குப் பிறகு ராபர்ட் வில்சன் என்பவரால் தத்து*

*எடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டார். இவரே ஏமிக்கு ஆசிரியராக இருந்து அறிவு புகட்டினார்.*

*ஏமிக்கு கண்கள் பழுப்பு நிறத்தில் இருந்தது. அவர் சொந்த நாட்டில் உள்ளவர்களுக்கு பெரும்பாலும் நீல நிறத்தில்தான் கண்கள் இருக்கும். இதனால் ஏமி இயேசுவிடம் அடிக்கடி தன் கண்ணின் நிறத்தை மாற்றும்படி ஜெபிப்பாராம். ஆனால் ஆண்டவர் ஏதும் செய்யாதபடியால் வருத்தத்துடன் இருப்பாராம். ஆனால் தான் ஊழியத்திற்கு இந்தியா வந்தபின்பு தன் கண்களின் நிறம் இந்தியர்களின் கண்கள் போல பழுப்பு நிறத்தில் இருப்பதைக் கண்டு ஆண்டவருக்கு நன்றி செலுத்தினார்.*

*ஏமிக்கு ஊழிய வாஞ்சை அதிகமாயிருந்தது.ஆனால் அவர் பல விதங்களில் மிஷனரி பணிக்கு செல்ல இயலாதவராய் இருந்தார். அவர் நியூரால்ஜியா எனும் கொடிய நரம்பு வியாதியால் பாதிக்கப்பட்டிருந்தார்.அது அவருடைய முழு சரீரத்தையும் பலவீனப்படுத்தி, சகிக்க முடியாத வலியினால் பல நாட்கள் படுக்கையில் இருக்க வைத்தது.*

***ஊழியப் பாதை:***

*1880 ஆம் ஆண்டில் ஏமி ஞாயிறு பள்ளி ஒன்றை ஆரம்பித்தார். சிறியதாய் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஊழியம் பிறகு 500 பேருக்கு மேல் சேர்ந்ததால் மாணவர்கள் அமர இடம் இல்லாத அளவிற்கு வளர்ந்தது. பிறகு சிலரின் பண உதவியுடன் வேறு இடத்தில் இந்த ஞாயிறு பள்ளி நடைபெற்றது.*

*1887 ஆம் ஆண்டு நடைபெற்ற கெஸ்விக் கூடுகையில் திரு.ஹட்சன் டெய்லர் மிஷனரி வாழ்க்கையைக் குறித்தும் அதன் தேவைப் பற்றியும் பேசுவதைக் கேட்டார். ஏமியைத் தத்து எடுத்து வளர்த்த ராபர்ட் வில்சன் இந்த கெஸ்விக் கூடுகையின் துணை நிறுவனராயிருந்தார். ஹட்சனின் பிரசங்கத்தின் மூலம் ஏமி தான் மிஷனரி ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருப்பதை உணர்ந்தார். உடனே ஊழியத்திற்குத் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்தார். உடனே அவர் 'China Inland Mission' என்ற மிஷனரி அமைப்பில் விண்ணப்பித்து லண்டன் நகருக்கு மிஷனரி பயிற்சிக்காக சென்றார்.*

***இந்தியாவில் ஏமியின் ஊழியங்கள்:***

*தொடக்கத்தில் ஏமி ஜப்பானுக்கே பயணம் செய்தார். ஆனால் உடல்நிலைக் காரணமாக அவர் திரும்ப நேரிட்டது. பின்பு சில காலம் அவர் இலங்கையில் ஊழியம் செய்தார்.பின்பு அவர் இந்தியாவிலுள்ள பெங்களூர் பட்டணத்திற்கு வந்தார். ஆண்டவர் கொடுத்த பாரத்தின் காரணமாக இந்தியாவிலேயே ஊழியம் செய்ய முழுமையாய் ஒப்புக்கொடுத்தார்.*

***டோனாவூர் ஐக்கியம்:***

*பின்பு அவர் தமிழ்நாட்டிற்கு வந்தார். ஏமியுடைய பெரும்பாலான ஊழியம் வாலிப பெண்களுக்கு மத்தியில் இருந்தது. இவர் மூலமாய் அநேக வாலிப பெண்கள் விபச்சாரத்திலிருந்து மீட்கப்பட்டனர். அதோடல்லாமல் அநேக குழந்தைகளை எடுத்து வளர்கக ஆரம்பித்தார். இதனால் 'டோனாவூர் ஐக்கியம்' என்ற அமைப்பை டோனாவூரில் நிறுவினார். ஏமியின் வழிநடத்துதலால்*

*ஆயிரத்திற்கும் மேற்பட்ட் குழந்தைகளுக்கு அவர் அமைப்பு அடைக்கலமாய் இருந்தது.இந்திய கலாச்சாரத்தைக் கனப்படுத்தும்படி இந்த அமைப்பில் உள்ள அனைவரும் சேலை உடுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.*

*இந்த அமைப்பில் தத்தெடுக்கப்படும் குழந்தைகளுக்கு இந்திய பெயரே அளிக்கப்பட்டது. ஏமியும் சேலை அணிவதை வழக்கமாகக் கொண்டு ஒரு இந்தியர் போலவே வாழ்ந்தார். தமிழர்களின் தோல் வண்ணத்தைப் பெற காப்பி நிறத்தால் தன் தோலை சாயம் பூசினார்.*

*இவரிடம் மிஷனரி வாழ்க்கை என்றால் என்ன என்று கேட்டதற்கு 'மிஷனரி வாழ்க்கை என்பது மரணத்திற்கு ஏதுவானது' என்று பதில் கூறினார். அந்த அளவிற்கு அவர் மிஷனரி பணிக்காகத் தன்னை அர்ப்பணித்தார். இவரின் ஊழியத்தால் கவரப்பட்ட ராணி மேரி 1912-ல் டோனாவூரில் ஒரு மருத்துவமனை நிறுவ நிதியுதவி அளித்தார்.1918-ல் சிறுவர்களுக்கான ஆதரவு இல்லத்தை நிறுவினார். இந்த சிறுவர்கள் பெரும்பாலும் இவரால் மீட்கப்பட்ட (விபச்சாரத்திற்கு வலுக்கட்டாயமாக்கப்பட்டவர்களின் குழந்தைகள்) ஆவார்கள்.*

**இறுதி நாட்கள்**


*1932 ஆம் ஆண்டு ஏமி அம்மையார் கீழே விழுந்ததால், பலமாக காயப்பட்டார். அதன் விளைவாக மரணம் வரை படுக்கையிலே இருக்க நேரிட்டது.ஆனால் அம்மையார் அந்த காலக்கட்டத்தில் 16 க்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டார்.*

*1951 ஆம் ஆண்டு ஏமி தன்னுடைய 83 ஆம் வயதில் மரணமடைந்தார்.அவர் தன்னுடைய கல்லறையில் நினைவுக்கல் ஏதும் பதிக்கக்கூடாது என கேட்டுக்கொண்டார்.ஆனால் அவர் அன்பாய் நேசித்த குழந்தைகள், அவருடைய கல்லறையில் பறவைகள் இளைப்பாற ஓரிடத்தை உருவாக்கி அதில் 'அம்மா' என்ற சொல்லைப் பதிக்கும்படிக் கேட்டுக்கொண்டார்.*

*இந்திய தேசம் 1948 ஆம் ஆண்டு 'தேவதாசி' முறையை ஒழித்தது. ஏமியின் பெருமுயற்சியே இதற்கு வித்திட்டது. இன்றும் கூட டோனாவூர் ஐக்கியம் சிறப்பாக செயல்பட்டுவருகின்றது.*

**அன்பில்லாமல் கொடுக்கலாம்...**
**ஆனால் கொடுக்காமல் அன்பாயிருக்க முடியாது -ஏமி**

***Dear Children's…***
***If you are interested Playing Keyboard for a Song during our Church Service, (During offertory), Please inform us in advance (min 2 weeks) and attend the Choir Practice at Parsonage. Necessary Song Notes, Support & guidance shall be provided as required.***



# மரியாள்

**இயேசு கிறிஸ்து** உலகத்தில் வாழ்ந்த நாட்களில்இ தேவன் அவரை உலகத்திற்கு அனுப்பின நோக்கத்தை நிறைவேற்றும் பணியில் அவரோடு இணைந்து அனேகம் பேர் செயல்பட்டார்கள். மேலும் அவர் மேல் கொண்ட அன்பினால் இணைக்கப்பட்டவர் பலர். அவர்களில் மரியாள் என்ற பெயர் மிகவும் அதிகமாக பேசப்பட்டஇ முக்கியத்துவம் பெற்ற ஒரு பெயராக காணப்பட்டது. அப்படி பேசப்பட்ட மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மரியாள் என்ற பெயர் கொண்ட மூன்று பெண்மணிகளைக் குறித்ததான சில குறிப்புகளை இங்கு பார்ப்போம்.

**இயேசுவின் தாயாகிய மரியாள்:**

நாசரேத்தூரானாகிய யோசேப்புக்கு நியமிக்கப்பட்ட மரியாள்இ பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரித்து (யோவான் 1:16) கிறிஸ்துவின் தாயாகிறார். அன்று முதல் கிறிஸ்துவின் ஊழிய கால ஆரம்பம் வரையிலும் ஒரு நல்ல தாயாக செயல்பட்டார். ஆகமங்களை கற்பிப்பது அலயபிரகாரங்களுக்கு முக்கியத்தவம் அளிப்பது (லூக்கா 2:41-52) போன்ற காரியங்களில் நமக்கும் கூட ஒரு முன்னுதாரணமாக அவர் காணப்படுகிறார்.

கிறிஸ்துவின் ஊழிய கால ஆரம்பம் முதல் அவருடைய ஊழியத்திற்கு மிகவும் உறுதுணையாக இருந்தார். அதே வேளை இயேசு கிறிஸ்துவின் ஊழியங்களில் தான் கிறிஸ்துவின் தாய் என்னும் உரிமையை காட்டாமலும் ஊழியங்களில் தலையிடாமலும் அமைதியாக இருந்தார். அதற்கு ஆதாரமாக கானாவூர் கல்யாண வீட்டு நிகழ்வையே பார்க்கலாம். ஸ்திரீயே உனக்கும் எனக்கும் என்ன (யோவான் 2:4) என்று கேட்ட போதும் சோர்ந்து போகாமல்இ தேவ தூதர்கள் மூலம் முன்னுரைத்த காரியங்களை முழுவதுமாய் உணர்ந்தவராய்இ வேலைக்காரரை நோக்கி அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள் என்று கூறி அமைதி காக்கிறார்.

இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்குகிற வேளையிலும் அவரது பாடுகளை பார்க்க முடியாதவராக கண்ணீரோடு சிலவையருகே நிற்கிறார் (யோவான் 19:25). மேலும் கிறிஸ்துவானவரின் பரமேறுதலின் பின் அவரின் சீ'rகளோடிணைந்து ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார் (அப் 1:11-14).

**மார்த்தாவின் சகோதரியாகிய மரியாள்:**

பெத்தானியாவில் கு்'டரோகியாயிருந்து விடுதலை பெற்ற சீமோனின் வீட்டில்இ இயேசு அவருடைய சீ'rகளோடு கூட அமர்ந்திருக்கும் வேளையில்இ பாவியாகிய ஒரு ஸ்திரீ அங்கு வந்துஇ இயேசுவின் பாதங்களில் பரிமள தைலத்தை பூசிஇ தனது தலை மயிரால் அவருடைய பாதங்களை துடைக்கிறாள் (யோவான் 12:1-8இ மத் 26:7இ மார்க் 14:3இ லூக்கா 7:37 ரூ 38)இ அவளுடைய பெயர் மரியாள்.

மரியாள் செய்த இந்த காரியத்திற்கு எதிர்மறையான விவாதங்கள் சீஷர் மத்தியில் எழுந்தாலும்இ கிறிஸ்துவோஇ அவர்களை கடிந்து அதற்கான விளக்கத்தையும் கொடுக்கிறார். இந்த மரியாளின் சகோதரி மார்த்தாள் இவர்களின் சகோதரன் லாசர். இந்த லாசருவைத்தான் இயேசு உயிரோடெழுப்பினார் என்றும் வேதத்தில் நாம் பார்க்கிறோம். மார்த்தாள் இயேசுவை வீட்டிற்கு அழைத்து விருந்தோம்பலுக்கான காரியங்களை கவனிக்கிறாள். மரியாளோ இயேசுவின் பாதபடியில் அமர்ந்து வசனங்களுக்க செவி கொடுக்கிறாள். இங்கேயும் மரியாளுக்கு எதிரான முறுமுறுப்பு எழுகிறது. இவற்றையெல்லாம் பொருட் படுத்தாது இயேசுவின் பாதபடியில் அமர்ந்திருந்த மரியாளோஇ "தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள்" என்று கிறிஸ்துவால் நற்சான்று பெறுகிறாள் (லூக்கா 10:38-42).

**மகதலேனா மரியாள்:**

கலிலேயா கடலின் மேற்கு கரையோரமாக இருக்கும் "மகதலா" என்னும் ஊரிலிருந்து வந்தவர் இந்த மரியாள்இ எனவே தான் மகதலேனா மரியாள் என்று அழைக்கப் படுகிறாள். கிறிஸ்துவினால் ஏழு பிசாசுகளிடத்திலிருந்து விடுதலை பெற்றவள் (லூக்கா 8:2). இயேசு கிறிஸ்துவுக்கு அவருடை ஊழியத்தில் மிகவும் உதவியாயிருந்த ஒரு பெண். எப்போது வாழ்வில் விடுதலை பெற்றாளோ அந்த வேளை முதல் கிறிஸ்துவோடு கூட அவரது சீஷர்கட்கு இணையாக அவருடன் இருந்தவள்.


கிறிஸ்துவின் கடைசி மூச்சு வரை சிலுவையண்டையிலே காத்து நிற்கிறாள்( மத் 27:56இ மாற்கு 15:40இ யோவான் 19:25). மற்ற மனிதர்களைப் போலஇ இன்னும் சொல்லப்போனால் அவரது சீஷர்கள் சென்றது போல அகன்று போய் விட வில்லை. யோசேப்பு என்பவன் தான் புதிதாய் வாங்கிஇ கன்மலையில் வெட்டியிருந்த புதிய கல்லறையில் அடக்கம் செய்கையிலும்இ அந்த கல்லறையின் முன்பாக அமர்ந்திருக் கிறாள் (மத் 27: 60 ரூ 61).

ஓய்வு நாளில் கிறிஸ்துவின் சரீரத்தில் பூசுவதற்கு கந்தவர்க்கங்களையும் பரிமளதைலத்தையும் மற்ற எல்லா ஆயத்தைங்களையும் பண்ணும் விதமாக மற்ற பெண்களோடு மிகுந்த கண்ணீரோடு புறப்பட்டாள் (லூக்கா 23:55-56). ஓய்வு நாளிலே அதிகாலையில் எழுந்து கந்தவர்க்கங்கள்இ பரிமளதைலம் ஆகியவற்றோடு கல்லறையை நோக்கி வருகிறாள். அதில் இன்னும் குறிப்பிட தக்க செயல் என்னவென்றால் அவர்கள் கொண்டு வந்த கந்தவர்க்கங்கள் பரிமளதைலம் ஆகியவற்றின் அளவு (75 பவுண்டுக்கும் அதிகமாக இருக்கும் என்று கணக்கிடப் பட்டுள்ளது) மிகவும் விலை உயர்ந்ததாக காணப்பட்டது. இது ஒருபோதும் ஈடு செய்ய முடியாத அன்பின் ஆழத்தையே வெளிப்படுத்துகிறது. கல்லறையில் வைக்கப்பட்டிருந்த சரீதத்தை காணாமல் கலக்கமடைந்திருக்கும் வேளையில் உயிர்த்தெழுதலை பறைசாற்றும் தூதர்களின் முதல் பறைசாற்றை கேட்கும் பாக்கியத்தை பெற்றாள். ஊயிர்த்தெழுந்த ஆண்டவரோடு உரையாடும் சிலாக்கியம் பெற்றாள். இன்னும் மேலாக உயிர்த்தெழுதலின் செய்தியை கிறிஸ்துவின் சீஷர்கட்கே சொல்லும் பேறு பெற்றவளானாள் (லூக்கா 24: 1-9).

ஆம் பிரியமானவர்களே! கிறிஸ்துவோடுள்ள நம் ஒவ்வொருவரின் உறவும் எந்த நிலையில் உள்ளது? சிந்தித்து பார்போமா. லெந்து நாட்களை கடந்து உயிர்த்தெழுதல் பண்டிகையையும் ஆசரிக்க ஆயத்தபடுகிறோம். நம் ஒவ்வொருவருக்கும் நம்மை தற்பரிசோதனை செய்ய கிடைத்த காலமாக இந்த லெந்து நாட்கள் அமைந்திருக்கும் என்று நம்புகிறேன். தேவன் தாமே நம் உவ்வொருவருக்கும் இப்போ.பட்ட வாயப்பினை தருவாராக.

அனைவருக்கும் **“இனிய ஈஸ்டர் தின நல் வாழ்த்துக்கள்”**

***Article by: M.Nesamony.***




# Bible

*On one early morning as I was going for a usual walk in the street, I saw an elderly man weeping. I asked him, “Dear father…why are you crying on such a cheerful morn ?”, the man replied, “friend…I have only one son ….he was everything to me and my wife ….we helped him complete his education and encouraged him to complete his degrees …my obedient son did as we wished...and he got the disease cancer a month or 2 ago…*



*I and my wife stayed with him in the hospital…Day before yesterday due to some work I had to come home. Yesterday my wife called me and said our son wanted to speak to me. So I left my work and rushed to the hospital where my son lay dying…*




*.....the nurse taking care of my son ushered me into my son's room saying, "sir, your son will be no more in 5 minutes ...we have done everything we could. But your son won't be able to survive . I am sorry sir.." I couldn't talk I just walked to my son and knelt down beside his bed. Before I could say a word my beloved son started talking, he said "father, you encouraged me to complete all my degrees and you compelled me to read all the books but you never asked me to read the bible even once.*

*Now how can I answer my creator, daddy?" Saying this my son died. His life has gone but his words are still pricking me ..." the man started crying again. I couldn't say anything for a minute. I am usually well versed and I find my words at any situation, but now I found myself speechless. I comforted the heart broken man as much as I could, bid farewell and walked away. As I walked, I realized the lesson I learnt was big...*



***So my friends, when you see the bible, Satan gets a headache. When you read the bible, Satan collapses and best of all when you meditate, a soul is saved…***

***Share this message to all the Christians you know and never cease reading the bible….***

***Article by Joshika Vashni***

## ஏலம் / *Auction (Weekly)*

சபை மக்கள் தங்கள் வீட்டில் உள்ள முதற்பலன்கள் மற்றும் தேவனுக்கு கொடுக்க விருப்பமுள்ள பொருள்களை சபைமுன் காணிக்கையாய் செலுத்தி தேவனை மகிமைப்படுத்தலாம். அந்த பொருள்; சபை ஆராதனை முடிந்த பிற்பாடு ஏலம் விடப்படும். சபை மக்கள் உற்சாகத்துடன் அந்த ஏலத்தில் பங்கு பெறுமாறு அழைக்கப்படுகிறீர்கள்.

# வெற்றியை நோக்கி ஓடுங்கள்

**ஜேம்ஸ் மார்ட்டிசன்** என்பவர் தனது இளம் பிராயத்தில் பனிச்சறுக்கு விளையாட்டில் பங்கு கொண்டு வெற்றிபெற வேண்டுமென்ற வாஞ்சையை கொண்டிருந்தார். ஆனால் அவர் வளர்ந்தபோதோ, அவர் இராணுவத்தில் சேர்ந்து இராணுவப் பணிக்கதாக வியாட்நாம் அனுமதிக்கப்பட்டார். அங்கு நிலக்கரி சுரங்கத்தில் பணியாற்றிய போது ஒரு விபத்து ஏற்ப்பட்டு தனகு இருகால்களையும் இழந்து நாடு திரும்பினார். தனது கனவெல்லாம் வீணாகிபோனதை எண்ணி மனம் நொந்து தேவனையும் மக்களையும் வெறுக்க ஆரம்பித்தார். போதை மருந்துகளுக்கும், குடிப்பழக்கத்திற்க்கும் அடிமையானார். ஒருசமயத்தில் தன் வாழ்வை மிகவும் வெறுத்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார்.

பின்பு ஜேம்ஸ், பல கிறிஸ்தவர்களைச் சந்தித்தார். கிறிஸ்து அவரை மாற்ற முடியுமென்று அவர்கள் அவருக்கு கூறினார்கள். அவர்களது வார்தைகளை ஜேம்ஸ் நம்ப மறுத்தார். ஆனால் இறுதியாக கிறிஸ்துவினால் தன் வாழ்வு மாற்றம்பெற முடியுமென்று நம்பி கிறிஸ்துவை ஏற்றுகொண்டார். “ கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினால் நான் என்கால்களை திரும்ப பெறவில்லை ஆனால் எனக்குள் ஒரு புதிய மாற்றத்தை நான் அனுபவிக்க திரும்பியிருக்கிறேன்” என்று அவர் கூறினார்.

கிறிஸ்துவை அனுபவிப்பதில் ஆர்வம் அடைந்த ஜேம்ஸ், வாலிபர்கள் மத்தில் தனது ஊழியத்தை துவங்கினார். ஒரு சமயத்தில் அவ்வாலிபர்கள் அவரிடம் “ஜேம்ஸ் எங்களுடன் ஓடுங்கள்” என்று அவரிடம் கூற அவரோ என்னால் முடியாது . எனக்கு கால்கள் இல்லை” என்றார். ஆனால் அவர்களோ, உங்களிடம் சக்கர நாற்க்காலி இருக்கிறதே என்று பதிலளித்தார்கள். அன்றுமுதல் அவர் சக்கர வண்டி உதவியுடன் பல பந்தையங்களில் பங்குகொண்டு பல பரிசுகளை வென்றார். “உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களுக்கு உங்கள் சக்கர வண்டி பந்தையம்தான் காரணமா? என்று மக்கள் அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவரோ, “இல்லை இந்த மாற்றத்திற்க்கு காரணம் இயேசுகிறிஸ்து” என்று பதிலளித்தார்.

நாம் தோல்வியின் உணர்வை அனுபவிக்கிறோமா? இயேசு கிறிஸ்துவிடம் திரும்புவோம். ஒரு நித்தியமான பரிசை பெறுவதற்க்காக ஓடும்படி அப்பொஸ்தலனாகிய பவுல் விடுவிக்கும் அறைகூவலை ஏற்றுக்கொள்வோம்

**“ நீங்கள் பெற்றுகொள்வதற்காக ஓடுங்கள்” (1 கொரி 9:24) .**

**நெல்சன் சோபித ராஜ்.**

# Youth Special…

## Kaká: “Without Jesus, I can’t do anything…




*Lying in bed for two months with a broken neck, 18-year-old Ricardo Izecson dos Santos Leite made a list of 10 goals. These were audacious dreams even for a boy raised on the soccer mania of Brazil – especially one who had needed a medical program to spur his stunted growth and who was yet to crack the starting lineup of the junior squad of São Paulo Football Club. The list began with “Return to soccer” and scaled upward to finish with “Compete in the World Cup” and “Transfer to a big club in Italy or Germany.”*

*In January 2001 about two weeks after returning to soccer he was called up to São Paulo's professional team. Brazil had met Kaká. (The nickname, pronounced Ka-kah', came when his older brother couldn't pronounce his name.) He claimed his starting spot for São Paulo and within two years could cross off the entire list of goals, including playing for Brazil's 2002 World Cup champions. By 2007 Kaká stood at the apex of world soccer, sweeping its highest individual honors: the FIFPro World Player of the Year, the Ballon d'Or for best in the world and the FIFA World Player of the Year.*

*"It may seem that I have everything," he says. "Due to my wealth and fame, some people ask why or if I still need Jesus. The answer is simple: I need Jesus every day of my life. His Word, the Bible, tells me that without Him, I can't do anything. I really believe that. The ability I have to play football and all that has resulted from it are gifts from God. He has given me a talent to use for Him, and I try to improve on it every day."*

*Kaká's star shot into the stratosphere in soccer-mad Brazil following his breakout game. The press couldn't get enough of him. After the initial shock, Kaká developed a warm accessibility with the press and fans, but he avoided the limelight and temptations of the nightclubs. His family and faith were his anchor.*

*"Many people think that I became a Christian after the accident, but that is not true," Kaká says. "My parents always taught me the Bible and its values, and also about Jesus Christ and faith."*

*Being baptized at 12 was an important milestone for Kaká and one that had a profound effect on his young spiritual life. "Little by little, I stopped simply hearing people talk about the Jesus my parents taught me," he says. "There came a time when I wanted to live my own experiences with God."*

*There's a common saying about soccer: "England invented it. The Brazilians perfected it." The Brazilian game is generally an artful, rhythmic flow marked by skillful dribbling and unexpected passing. The nation brought joga bonita, the beautiful game, to the world and holds more World Cup championships, five, than any other country.*

*European soccer is generally considered more physical and tactical than the South American game, but the 6-foot, 1-inch, 180-pound Kaká adapted instantly. His first season he earned a starting role. Most media have shown respect for Kaká's faith and praised his sportsmanship. His consistency and graciousness matched with his stellar*

*play make it difficult to do otherwise. Yet when some have suggested that his lifestyle is boring, Kaká has countered that it is radical to follow Christ. As Kaká continues to pursue new goals, he leaves little doubt that he is all about Jesus.*

***"Today, I have my ministry through sports, but I play because I have a God-given gift," he says. "I play because He has perfected the gift He gave me in my life. Jesus said 'without me, you can do nothing' and I believe this."***




GROWING STRONGER…
GROWING DEEPER…
& REACHING HIGHER





## Cartoon of the Month

**DON'T OPEN THAT DOOR**

A Joyful 'toon by Mike Waters




If you do what is right, will you not be accepted? But if you do not do what is right, sin is crouching at your door; it desires to have you, but you must master it. – Genesis 4:7 NIV

---

## Children who wrote the Children's Quiz correct answers:

***Roshan, Shelbino, Eastrine, Angelin, Annlin, Jayne John, Joshua***

## Children who successfully did the Cross Word Puzzle

***Roshan, Diniya, Shelbino, Eastrine, Angelin, Dennis, Annlin, Jayne John, Jonathan, Joshika, Joshua***

## Children who successfully did the Bible Word Search

***Roshan, Shelbino Paul, Eric Jayden, Earline, Jayne John, Joshua, Jonathan***



# *Children's Quiz (Primary and above)*

**FROM THE BOOK OF PROVERBS – 1 TO 5**

*1) A wise man will _______ and will increase ________*
*a) Work, riches b) hear, learning c) think, knowledge*

*2) What will give us long and prosperous life?*
*a) God's words b) Treasures c) Love from people*

*3) The ways of man are before the eyes of _________*
*a) The Devil b) The Authority c) The Lord*

*4) The Lord correcteth the ones that he ________*
*a) Hates b) Loves c) Cares*

*5) The wise shall inherit _____ but _____ shall be on fools.*
*a) Glory, shame b) kingdom, curse c) goodness, curse*

***Complete The Verse**:*

*6) "The _______of the Lord is the beginning of _______"*

*7) "We must refrain our _____from the path of the ___"*

*8) "______ in the Lord with all thine ______ and lean not in thine own __________"*

*9) "The ________ of the Lord is in the house of the wicked but he _______ the house of the just"*

*10) EXPLAIN your thoughts with reference…*

- *What is an ornament to your head and chain to your neck?*
  *(For children below 10 yrs)*
- *How is the path of a just and wicked?*
  *(For children >10yrs)*

***Last Month Children's Quiz Correct Answers:***

***March– 2019***

*From The Book of 1 Peter 1 to 5*

*1) (c) Mercy (1:5)*

*2) (a) Faith (1:7)*

*3) (b) Minds (1:13)*

*4) (a) Word of God (1:23)*

*5) (c) wounds, healed (2:24)*

*6) Fleshly lust (2:11)*

*7) Sins, righteousness (2:24)*

*8) Vigilant, sober (5:8)*

*9) b) Humility (5:5)*

*10) (3:8,9) & (4:17)*



# Kids Coloring (Kinder & Beginner)

Dear Parents....Before Coloring....Explain the story to your kids...







Dear Kids··· Write your name··· here...

**Children's who did the Coloring- March 2019**

**Hartlyn* | *Crasslin* | *Rishon* | *Ridhun* | *Eion*

**Jaden* | *Johan Sanjo* | *Jehoash John**

**Jonathan * | *Jeremiah* | * Jemimah**

## *Bible Word Search (Beginner / Primary)*

| FIND THE BOOKS OF OLD TESTAMENT | |
|---|---|
| 1. | I E M L N O P H = |
| 2. | U E J D = |
| 3. | M S A O N R = |
| 4. | I H P I P L P A = |
| 5. | S U I T T = |
| 6. | A E J S M = |
| 7. | E L A E V R O N I T = |
| 8. | R E B W E S H = |
| 9. | I O M I T T Y H = |
| 10. | I C R O N H T A = |
| 11. | U E L K = |
| 12. | I I E E T P R = |
| 13. | T A T E H M W = |
| 14. | S I S A N O O L = |
| 15. | T S C A = |

## *Find the Bible Character…*





| | |
|---|---|
| *1* | |
| *2* | |
| *3* | |
| *4* | |
| *5* | |
| *6* | |
| *7* | |
| *8* | |
| *9* | |
| *10* | |

# Bible Cross Word (Primary & Above)

## NAME THE PLACE

*Your Name….*




*1. God confused the plans of men to build the sky reach tower in this city*

*2. Called as the House of God*

*3. Promise land of Israelites*

*4. Place where Naomi moved with her husband and children during drought*

*5. City Walls destroyed due to the praises of Israelites*

*6. The sun stood still over ______*

*7. And the moon stood still in the valley of _____*

*8. Saul found David hiding in this wilderness*

*9. Elijah was taken up by chariots of fire in the banks of _______*

*10. Jonah found his ship to Tarshish at this place*

*11. Gideon,s altar for god, The Jehovah Shalom is located in this place*

*12. Sarah died in ______*

*13. Abraham pleaded God not to destroy the city of ________*

# வேத வினா விடை போட்டி

**எரேமியா 36 to 45**

*1.எரேமியாவை விடுதலை செய்த காவற்சேனாதிபதியார்……..? அவன் எரேமியாவிடம் சொன்ன வார்த்தை என்ன……...?*

*2. எரேமியாவை யாருடைய துரவிலே போட்டார்கள்------------ அவனை காப்பாற்றியது யார் எப்படி ----------------------------காப்பாற்றினார்கள்-----?*

*3. கர்த்தர் எரேமியா உடனே சொல்லி வந்த எல்லா வார்த்தைகளையும் எழுதியது யார்? --------- அவன் எங்கே இருந்து அதை வாசித்தான்..?*

*4. எகிப்துக்கு போக வேண்டாம் என்று கர்த்தர் யாரை எச்சரிக்கிறார்? எகிப்தில் தரித்திருந்தால் அவர்களுக்கு சம்பவிப்பது என்ன?*

*5. எதை செய்ததினால் திருப்தியாகவும், எதை செய்யாததினால் எல்லாம் குறைவுபட்டு வாழ்ந்தோம் என யூத ஜனங்கள் எரேமியாவுக்கு அறிவித்தார்கள்...?*

*6. எருசலேம் சிறைப்பட்டுப் போனபின்பு எருசலேமுக்கு அதிகாரியாக ஏற்படுத்தப்பட்டவன் யார் அவனை ----------- கொலை செய்ய சொன்னது யார் அவனை -------------- கொன்று போட்டது யார்...?*

*7. எரேமியா கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணி, பத்து நாள் சென்றபின்பு எரேமியாவினால் மக்களுக்கு உரைக்கப்பட்ட விசுவாச வார்த்தைகள் என்ன...?*

*8. எரேமியா, சிதேக்கியா ராஜாவினிடத்தில் பண்ணின விண்ணப்பம் என்ன?*

*9. உன்னை நிச்சயமாக விடுவிப்பேன், நீ பட்டயத்துக்கு இரையாவதில்லை என்று யாருக்கு சொல்லப்பட்டது?*

*10. எரேமியாவால் சொல்ல எழுதப்பட்ட முதலாம் புத்தகச் சுருளை சுட்டெரித்தது யார்...?*

**மார்ச் மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்**

திருமதி . ஜோனீஷ் ஹெர்ஷெல்

திருமதி. எபென் A .பிரசாத்

திருமதி. ராதிகா செல்வகுமார்

திருமதி. சிந்துஜா சதீஷ்

திருமதி. பமீலா டேனியல்

திருமதி. பெட்ரீஷியா ஜேசன்

திருமதி. ரோஸ்லின் பாலாஜி

திருமதி. ஜெயின் ராஜவேல்

திருமதி. ஜெயின் ராஜவேல்

திருமதி. பிப்லின் நெல்சன்

திருமதி. ரோஸ்லின் பாலாஜி

திருமதி. அகஸ்டா லாரன்ஸ்

திருமதி. ஹெப்சிபாய் நேசமணி

திருமதி. ஜெயந்தா ஜாண்

திருமதி . நிர்மலா ஜெனிபர்

**வாழ்த்துக்கள்...!**

## கடந்த மாதத்திற்கான விடைகள்

*1. யோயாக்கீம் எரே)26: 21-24) │2. அனனியா எரே)28:1-4) │ 3. அனாமெயேல் )32:7) │ 4. நான்கு முறை │ 5. மத்தேயு 2:17 │ 6. கர்த்தர் -- எரே) இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொன்னது29:5) │ 7. யெரொபெயாமின் மனைவி )1 இரா 14) │ 8. யாபேஸ் )1 நாளா 4:9) │ 9. எக்லோன் என்னும் மோவாபிய ராஜா நியாதி)3: 12-22)*

*10. எரிக்கப்பட்ட மந்திர தந்திர புத்தகங்களின் மதிப்பு: 50,000 (அப்போ 19:19), வனாந்திரத்தில் போஷிக்கப்பட்ட புருஷர்களின் ஆண் பிள்ளைகளின் மதிப்பு 5000 (மத் 14:21), 5 முதல் 20 வயதுக்குட்பட்ட ஆண்பிள்ளைகளின் மதிப்பு 20 சேக்கல் லேவி)27:5), மேல் வீட்டு அறையில் கூடியிறந்தவர்களின் எண்ணிக்கை 120 (அப்போ 1:15) -* ***கழுதையின் தலை*** *- 80 ( 2 இராஜா 6:25)*

### கண்டுபிடிக்க...



- *முதன் முதலில் மரித்த மனிதர் யார்?*
- *முதன் முதலில் இரண்டு முறை மரித்த மனிதர் யார்?*
- *முதன் முதலில் தற்கொலை செய்து மரித்த யார்?*
- *வேதத்தில் 2-நபர்கள் பிறந்தார்கள் ஆனால் மரிக்கவில்லை?*
- *2-நபர்கள் மரித்தார்கள் ஆனால் பிறக்கவில்லை?*
- *நான் இந்த உலகத்தில் வாழ விரும்புகிறேன் என்று தன் உயிர்காக்க விண்ணப்பம் பண்ணிய மனிதன் யார்?*
- *நான் இந்த உலகத்தில் வாழ விரும்பவில்லை என்று தன் உயிர் போக விண்ணப்பம் பண்ணிய மனிதன் யார்?*
- *நான் இந்த உலகத்தில் வாழ்வும் விரும்புகிறேன் சாகவும் விரும்புகிறேன் என்று தன் இருதயத்தில் சிந்தித்து செயல்பட்டது யார்?*

### வேதாகம விடுகதை:

*நோவாவின் காலத்தில் மழை பெய்த நாட்களை, இயேசு சிலுவையில் கூறிய வார்த்தைகளின் எண்ணிக்கையால் பெருக்கி, ஐந்தாயிரம் பேர் சாப்பிட்ட அப்பங்களின் எண்ணிக்கையால் வகுத்துக், கானாவூர் கலியாண வீட்டில் பயன்படுத்திய கற்சாடிகளின் எண்ணிக்கையால் கூட்டி வரும் எண்...!!! இந்த எண் புதிய ஏற்பாட்டில் லுக்கா புஸ்தகத்தில் ஒரு அதிகாரத்தின் மொத்த வசனங்களை குறிக்கும். அந்த அதிகாரத்தின் ஒரு வசனத்தில், விவசாய தொடர்புடைய ஒரு பொருளின் பெயர் உள்ளது...அது என்ன...??? பதிலை வேதாகம இருப்பிடம் குறிப்பிட்டு தெரிவிக்கவும்.*

*விடை அடுத்த மன்னாவில்...*

# பிறந்த நாள் மற்றும் திருமண நாள் ஆசரிப்போர்

## பிறந்த நாள் ஆசரிப்போர் / Birthday Celebrants

| Date | Name | Contact |
|---|---|---|
| 01-Apr | Mrs. Olivia Sherin | 050 6848174 |
| 02-Apr | Mr. Blessin Paul | 050 573 7096 |
| 03-Apr | Mr Evans Jeffrin | |
| 03-Apr | Mr. Alvin Kumar Asirmanns | 055 6757928 |
| 03-Apr | Mstr. Alan Manis | 055 6757928 |
| 04-Apr | Mstr. Regan Shah | 052 9723142 |
| 06-Apr | Mr. Herchil Harish | 056 2524659 |
| 09-Apr | Mr. A Yobu | 055 832 8701 |
| 10-Apr | Mr. Sam Jegan | |
| 13-Apr | Mrs. Prema Ruth. T | 050 850 7652 |
| 14-Apr | Mrs. Angel Christopher | 056 710 5082 |
| 17-Apr | Mrs. Shelly Kurian | 056 1932532 |
| 17-Apr | Ms. Diniya Sunshine | 050 4491769 |
| 26-Apr | Ms. Evans Hashne | |
| 28-Apr | Mr. M. Santhosh Joel Kumar | 056 875 2723 |
| 28-Apr | Mrs. Sukirtha | |
| 30-Apr | Ms. Sherin Shah | 055 931 8750 |
| 30-Apr | Mr. Mohana Kumar R | 050 141 2529 |

## திருமணநாள் ஆசரிப்போர் / Wedding Anniversary

| Date | Name | Contact |
|---|---|---|
| 05- Apr | Mr. Kingsly Stoobert & Mrs.Shalini Vimala | 050 924 9930 |
| 10- Apr | Mr. Baskar Rajaram & Mrs. Angelin Nalini | 055 825 6072 |
| 13- Apr | Mr. A Selvakumar & Mrs. Bawani | 050 838 6851 |
| 13- Apr | Mr. Sunith Samuel & Mrs. Shiby Angel | 056 547 3326 |
| 19- Apr | Mr. Nelson Sopitha Raj & Mrs. Biblin | 055 602 8865 |
| 26- Apr | Mr. Melbin Paul & Mrs. Shally | 056 394 1817 |



## நமது சபை உறுப்பினர்களை - தெரிந்து கொள்வோம்...

| *CSI Tamil Parish Family No: 002* | *Mobile no: 050 7834 649* |
|---|---|
| *Mr. Ashok Prasad (Head)* | |
| *Mrs. Eben A Prasad (Wife)* | |
| *Mrs. Vinolia Allen (Daughter)*<br>*Mr. Allen Sandeep (Son In Law)*<br>*Ms. Genelia Allen (G/Daughter)* | |
| *Location in India :*<br>*Palayamkottai-Perumalpuram*<br>*Tirunelveli, Tamilnadu.* | |

| *CSI Tamil Parish Family No: 003* | *Mobile no: 050 583 8826* |
|---|---|
| *Dr. G Alexis Joy (Head)* |  |
| *Mrs. Padma Joy (Wife)* | |
| *Mr. Derick G Joy (Son)*<br>*Mrs. Sheeba Derick (D/Law)*<br>*Mstr. Aidan Derick (G/Son)*<br>*Mstr. Aldan Derick (G/Son)* | |
| *Mr. Derin Joy (Son)*<br>*Mrs. Fanny Derin (D/Law)* | |
| *Location in India : Neyyoor Kanyakumari India* | |

| *CSI Tamil Parish Family No: 004* | *Mobile no: 050 911 9657* |
|---|---|
| *Mr. Justin Oliver (Head)* |  |
| *Mrs. Sahila Grace (Wife)* | |
| *Mr. Blessin Paul (Son)* | |
| *Mr. Bessy Rose (Daughter)* | |
| *Location in India : West Neyyoor, Kanyakumari India* | |

# DAILY BIBLE READING February – 2019

## "Your word is a lamp to my feet and light for my path"

| Date | Morning / காலையில் | | ✓ | Evening / மாலையில் | | ✓ |
|---|---|---|---|---|---|---|
| 1 | சங்கீதம் 1-2 | Psalms 1- 2 | | லேவியராகமம் 4 | Leviticus 4 | |
| 2 | சங்கீதம் 3- 4 | Psalms 3-4 | | லேவியராகமம் 4 | Leviticus 5 | |
| 3 | சங்கீதம் 5- 6 | Psalms 5-6 | | லேவியராகமம் 6 | Leviticus 6 | |
| 4 | சங்கீதம் 7- 8 | Psalms 7-8 | | லேவியராகமம் 7 | Leviticus 7 | |
| 5 | சங்கீதம் 9 | Psalms 9 | | லேவியராகமம் 8 | Leviticus 8 | |
| 6 | சங்கீதம் 10 | Psalms 10 | | லேவியராகமம் 9 | Leviticus 9 | |
| 7 | சங்கீதம் 11 -12 | Psalms 11-12 | | லேவியராகமம் 10 | Leviticus 10 | |
| 8 | சங்கீதம் 13- 14 | Psalms 13-14 | | லேவிய 11-12 | Leviticus 11-12 | |
| 9 | சங்கீதம் 15- 16 | Psalms 15-16 | | லேவியராகமம் 13 | Leviticus 13 | |
| 10 | சங்கீதம் 17 | Psalms 17 | | லேவியராகமம் 14 | Leviticus 14 | |
| 11 | சங்கீதம் 18 | Psalms 18 | | லேவியராகமம் 15 | Leviticus 15 | |
| 12 | சங்கீதம் 19 | Psalms 19 | | லேவியராகமம் 16 | Leviticus 16 | |
| 13 | சங்கீதம் 20-21 | Psalms 20-21 | | லேவியராகமம் 17 | Leviticus 17 | |
| 14 | சங்கீதம் 22 | Psalms 22 | | லேவியராகமம் 18 | Leviticus 18 | |
| 15 | சங்கீதம் 23-24 | Psalms 23-24 | | லேவியராகமம் 19 | Leviticus 19 | |
| 16 | சங்கீதம் 25 | Psalms 25 | | லேவியராகமம் 20 | Leviticus 20 | |
| 17 | சங்கீதம் 26- 27 | Psalms 26-27 | | லேவியராகமம் 21 | Leviticus 21 | |
| 18 | சங்கீதம் 28-29 | Psalms 28-29 | | லேவியராகமம் 22 | Leviticus 22 | |
| 19 | சங்கீதம் 30 | Psalms 30 | | லேவியராகமம் 23 | Leviticus 23 | |
| 20 | சங்கீதம் 31 | Psalms 31 | | லேவியராகமம் 24 | Leviticus 24 | |
| 21 | சங்கீதம் 32 | Psalms 32 | | லேவியராகமம் 25 | Leviticus 25 | |
| 22 | சங்கீதம் 33 | Psalms 33 | | லேவியராகமம் 26 | Leviticus 26 | |
| 23 | சங்கீதம் 34 | Psalms 34 | | லேவியராகமம் 27 | Leviticus 27 | |
| 24 | சங்கீதம் 35 | Psalms 35 | | எண்ணாகமம் 1 | Numbers 1 | |
| 25 | சங்கீதம் 36 | Psalms 36 | | எண்ணாகமம் 2 | Numbers 2 | |
| 26 | சங்கீதம் 37 | Psalms 37 | | எண்ணாகமம் 3 | Numbers 3 | |
| 27 | சங்கீதம் 38 | Psalms 38 | | எண்ணாகமம் 4 | Numbers 4 | |
| 28 | சங்கீதம் 39 | Psalms 39 | | எண்ணாகமம் 5 | Numbers 5 | |
| 29 | சங்கீதம் 40 -41 | Psalms 40-41 | | எண்ணாகமம் 6 | Numbers 6 | |
| 30 | சங்கீதம் 42-43 | Psalms 42-43 | | எண்ணாகமம் 7 | Numbers 7 | |

**CSI Tamil Parish** AGM Annual General Meeting **Friday April 26th 2019**